மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது பரிசீலனையில் இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், மதுரை மாவட்டம் நிலக் கோட்டை தாலுக்காவிலுள்ள சோழவந்தான் கேந்திரமான நகரம் என்ற அளவில் இருப்பதால் அங்கேயிருக்கும் ஆஸ்பத்திரியை அரசின் ஆஸ்பத்திரியாக ஆக்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இதற்காக 'நான்-ரெக்கரிங்காக' தொடக்க நிலையில் 15,000 ரூபாய் ஒதுக்க வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ மேலும் 33,600 ரூபாய் செலவழிக்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, அந்த முழுத் தொகையையும் செலவு செய்ய அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, இது எத்தனை மாதங்களாகப் பரிசீலனையில் இருக்கிறது, எப்பொழுது முடிவெடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, பொது வாக எந்தவிதமான ஒரு பஞ்சாயத்திலும், ஒரு மருத்துவ மனையை எடுப்பதாக இருந்தால் மருத்துவமனைக் கட்டடம் முழு அளவில் செம்மையாக வழங்கப்பட வேண்டும். அந்தக் கட்டடம் முழு அளவில் வழங்கப்படும் நிலையில் இல்லை. சிறு மாற்றம் தேவைப்படுகிறது. அவற்றையும் அவர்கள் செய்துதர வேண்டு மென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆனால் தாங்கள் வழங்கும் பஞ்சாயத்தில் வழங்கும் தொகையை அதிகப் படுத்துவதாக ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். முதல் நிலைக்குச் செலவழிக்க அரசு ஏற்க வேண்டியதாயிருக்கிறது. பரிசீலனை நடந்து வருகிறது. காலதாமதம் ஆவதற்குக் காரணம் அதிக நிதி இல்லாததுதான்.

Bonus for workers in Neyveli Lignite Corporation

*47 Q.—THIRU K. T. K. THANGAMANI: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that 18,000 workers in Neyveli Lignite Corporation have demanded bonus for the year 1970; and

(*b*) if so, how it was settled?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆம். 1970-71-ஆம் ஆண்டுக்கான போனஸ் கோரிக்கையை வலியுறுத்தி 16—10—1971 நாளன்றோ, அதற்குப் பின்னரோ வேலைநிறுத்தம் மேற்கொள்ளப் போவதாக நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் தொழிற் சங்கங்கள் அறிக்கை விடுத்தார்கள்.

(இ) என் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் விளைவாக, எல்லாத் தொழிலாளர்களும், 1970-71-ஆம் ஆண்டுக்கான வருவாயில் 5 சதவீதம் போனஸ் வாங்கிக் கொண்டுள்ளனர்.

1972 சனவரி 25]

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், நெய்வேலியிலே தொழிலாளர்கள் அதிகமாக இருக்கிருர்கள், சுமார் 18,000 பேர் வரையிலே இருக்கிருர்கள். ஒவ்வொரு ஆண்டும் இந்த போனஸ் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடந்து இறுதியிலே அது சிக்கலாக முடிகிறதே. ஆகவே, இந்த ஆண்டு அவர்கள் கோரிக்கை வைப்பதற்கு முன்னலேயே முக்கிய சங்கப் பிரதிநிதிகளைக் கூப்பிட்டு வைத்து இதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, ஒவ்வொரு ஆண்டும் கோரிக்கை வைத்தாலும் அது சுமுகமாக முடிந்து வருகிறது. இந்த ஆண்டும் அதைப்போலச் செய்ய அரசு ஆவன செய்யும்.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய தொழிலாளர் அமைச்சரவர்கள் எடுத்த முயற்சியின் காரணமாகத்தான் 4 சதவீத போனஸ் என்பது 5 சதவிகிதமாக கிடைத்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : கனம் உறுப்பினர் சொல்வது உண்மையாகும்.

திரு. எம். சுரேந்திரன் : சார் தொழிலாளர்களுக்குப் போனஸ் வழங்குவது சம்பந்தமாக சமீப காலத்தில் பல விவாதங்கள் நடந்து 8.33 சதவிகிதம் போனஸ் வழங்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டு, நம்முடைய அரசாங்கமும் அது நியாயம் என்று ஏற்றுக்கொண்ட பிறகு, இப்படி அரசாங்க நிறுவனங்களில் இருக்கும் தொழிலாளர்களுக்கு முதலிலே அதைச் செய்து மற்றவர்களையும் செய்யும்படி தூண்ட அரசாங்கம் முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : 8 1/3 என்ற சதவிகிதத்தில் போனஸ் தர வேண்டுமென ஐ.எல்.ஓ. மகாநாட்டில் டெல்லியிலே தமிழக அரசால் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. அதே கொள்கையை மற்றும் பல தலைவர்கள் கூறியிருக்கிருர்கள். ஆனல் இந்திய அரசு பரிசீலித்து வருகிறது. அது சட்டமாக்கப் பட்டவுடன் நடைமுறைக்குக் கொண்டுவரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விஞ எண். 48 அடிசன்ஸ் அண்டு கம்பெனியில் கதவடைப்பு பற்றியது. அதுபற்றி இங்கு வந்திருக்கின்ற ஒரு சில ஒற்றிவைப்புத் தீர்மானங்களையொட்டி பின்னல் எடுத்துக்கொள்ளப்படலாம் என்று இருப்பதால் இந்தக் கேள்விக்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

வலையப்பட்டி கர்ணத்தின் மீது புகார்

***49 விஞ—திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விஞக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்திலுள்ள வலையப்பட்டி கர்ணத்தின் மீது அக்கிராம மக்களால் விண்ணப்பம்